**இரண்டாவது நகரங்கள் மற்றும் கிராமிய சமூக அடிப்படை நீர் வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்திட்டம் (கடன் இல 2758 - எஸ்ஆர்ஐ) - 2014**

இரண்டாவது நகரங்கள் மற்றும் கிராமிய சமூக அடிப்படை நீர் வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்குமிடையே கைச்சாத்திடப்பட்ட 2011 யூலை 22 ஆந் திகதிய செயற்திட்ட உடன்படிக்கையின் (ஏ) ஆம் உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவு மற்றும் 2758 எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு, காலம் என்பன

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சும் தற்போதைய நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (என்டபிள்யூஎஸ்டிபீ) செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கிழக்கு மாகாணத்தின் மூதூர் நகரப் பகுதிகளில் உள்ள 52,000 மக்ககளுக்கு பாதுகாப்பான நீரினைவழங்குவதும், நீர்த்துறை நிறுவனங்களைப் பலப்படுத்துவதன் மூலம் பாதுகாப்பான நீரை வழங்குவதற்கான இலங்கை அரசாங்கத்தின் இயலளவை உயர்த்துதல் செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். செயற்திட்டத்தின் மொத்தக் கிரயம் ரூபா 1,942 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 17.87 மில்லியன் ஆனதுடன் அதில் ரூபா 1,446 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 13.3 மில்லியன் அல்லது 74 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்துடன் ரூபா 497 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 4.57 மில்லியன் அல்லது 26 சதவீதம் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2014 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று ஆரம்பத்தில் பட்டியலிடப்பட்டிருந்ததுடன் பின்னர் இது 2015 யூலை 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.4. கணக்காய்வாரின் பொறுப்பு

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும்,

செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும், வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் குறித்துரைக்கப்பட்ட கடன்உடன்படிக்கையின் அளவீடுகளுக்கு இணங்கியிருந்தனவா என்பதும்

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலிற்காக பின்பற்றப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது கடந்த ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டுள்ளனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொளள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது கடந்த ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 1.3 மில்லியன் கிரயத்தில் 2014 திசெம்பர் 31 வரை செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கிடுவதற்குப் பதிலாக அதிகரிக்கும் செயற்பாட்டுக் கிரயத்திற்கு சாட்டுதல் செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் பெறுமானத்தேய்வு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையால் அமுலாக்கப்பட்ட ஏனைய செயற்திட்டங்களிற்காக மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட ரூபா 6.5 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையான செலவினம் செயற்திட்டத்தின் கிரயமாகக் கருதப்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் செய்ற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டு மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | 2014 ஆம் ஆண்டின் போது பயன்படுத்திய நிதிகள் | 2014 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள | |
|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ஐ.அ.டொலர் மில் | ரூபா மில் |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 13.30 | 1,445.71 | 494.53 | 388.78 | 9.89 | 1,258.81 |
| இலங்கை அரசாங்கம் | 4.57 | 496.76 | 69.57 | 88.73 | 3.25 | 376.36 |
| மொத்தம் | 17.87 | 1,942.47 | 564.10 | 477.51 | 13.14 | 1,635.17 |

பட்டியலிடப்பட்ட செயற்திட்ட காலத்திற்குள் ஒதுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி செயற்திட்டத்தின் நோக்கங்கள் அடைதலை உறுதிப்படுத்துவதற்கு முழுச் செயற்திட்டக் காலத்தையும் மேவி மாதாந்த, காலாண்டு மற்றும்

அரையாண்டு முதலியவற்றில் நிர்ணயிக்கின்ற பொறுப்புக்களுடன் நிதி மற்றும் பௌதீக இலக்குகள் சுட்டிக்காட்டுகின்ற ஒட்டுமொத்த விரிவான செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், அத்தகைய திட்டமெதுவும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

மூதூரில் தலைமை வேலைகள், மூல நீர் பரிமாற்றம் மற்றும் சுத்திகரிப்பு பொறி என்பவற்றின் நிர்மாணம் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட மூல திகதியிலிருந்து 11 மாதங்களிற்கு மேலான தாமதத்துடன் 2014 நவம்பர் 28 இலேயே பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் தாமதத்திற்கான காரணங்கள் கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வழமையாக, செயற்திட்ட பதவியணியினரின் வேதனங்களின் கணப்பீடு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் செய்யப்படுகின்றதுடன் அதன் நிர்வாக வேலைகளிற்காக செயற்திட்டம் போதிய பதவியணியினரை சேர்த்திருந்த போதிலும் சம்பள செலவினத்தின் 20 சதவீதம் மேந்தலை கட்டணங்களாக செயற்திட்டத்திலிருந்து அறவிடப்படுகின்றன. மீளாய்வாண்டின் போது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு செயற்திட்டத்தால் செலுத்தப்பட்ட அவ்வாறான மேந்தலைக் கட்டணங்கள் ரூபா 2.8 மில்லியனாகும்.

(ஆ) 2014 திசெம்பர் 31 வரை ஒப்பந்தகாரர்கள் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு செலுத்த வேண்டிய முறையே ரூபா 6.2 மில்லியன் மற்றும் ரூபா 4.9 மில்லியன் தொகைகள் அரசாங்கத்திடமிருந்து பெறவேண்டிய மானியங்களில் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டதுடன் இது பொது திறைசேரியால் உறுதிப்படுத்தப்பட்டிருக்காத போதிலும் இதன்படி கணக்கீட்டுச் சீராக்கல்கள் செய்யப்பட்டிருந்தது.

### 3.4 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பிரதான விநியோக குழாய் வரிசைக்காக (10.5 கிமீ) சுத்திகரிக்கப்பட்ட நீர் குழாய் பொறிகளின் வழங்கல் மற்றும் பொருத்துதல் மீதான ஒப்பந்தம் இரண்டு மதிப்பிட்ட நீர் சுத்திகரிப்பு பொறிகளின் நிர்மாணம் 2 ஆண்டுகள் தாமதத்தின் பின்னர் 2011 செப்தெம்பர் 30 அளவில் ரூபா 1,162,504,731 கிரயத்தில் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் உரிய ஒப்பந்தத்திற்கு இணையொத்து பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட மூல நீர் பரிமாற்ற சுத்திகரிப்பு பொறி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட நீர் குழாய் பொறிகள் போன்ற ஏனைய

ஒப்பந்தங்களின் கீழ் தொடர்புபட்ட வேலைகளின் பூர்த்தியாக்கலிலுள்ள தாமதத்தின் காரணமாக 2014 திசெம்பர் 31 வரையும் பயனற்று இருந்தது.

(ஆ) ரூபா 7.2 மில்லியனிலிருந்து ரூபா 18.4 மில்லியன் வரையான வீச்சிலுள்ள காசு மீதி மீளாய்வாண்டு முழுவதும் வங்கி நடைமுறைக் கணக்கில் இருந்தது. ஆதலால், கடன் பெறுகைகள் குறித்த நோக்கங்களிற்காக வினைத்திறனாக பயன்படுத்தாமல் பயனற்று இருந்தமையை குறிக்கின்றது.

**4. நிதிக் கட்டுப்பாட்டு விடயங்கள்**

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் உள்ளக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.